**வட மாகாணத்தில் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதற்கான செயற்திட்டம் - 2013**

------------------------------------------------------------------------------------------------

வட மாகாணத்தில் தேசிய வீதி வலையமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கும் இடையேயான 2010 செப்டெம்பர் 09 ஆந் திகதிய பீஎல்ஏ 201006 ஆம் இலக்கக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு, காலம் என்பன

------------------------------------------------------------------------------------------------

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவர்கள் ஆகும். செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையாகும். தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமைத்துவப்படுத்தி ஒருங்கிணைப்பதற்குத் வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பாக உள்ளது. 10.8 கிலோமீற்றர் ஒட்டுச் சுட்டான் - நெடுங்கேணி வீதி (பீ 334) யையும் 41.8 கிலோமீற்றர் முல்லைத்தீவு – புளியங்குளம் வீதி (பீ 296) யையும் புனரமைத்து முன்னேற்றம் செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 5,928.30 மில்லியனுக்கு நிகரான 50.0 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். இதில் 85 சதவீதமான ரூபா 4,880.11 மில்லியனுக்கு நிகரான 42.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியது. செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 2010 டிசெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பமாகியது. 2011 ஆகஸ்ட் 15 முதல் ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. 2014 பெப்ரவரி 14 ஆந் திகதியளவில் வீதிப் புனரமைப்பு வேலைகள் முடிவடையும் என பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 ஜூன் 27 ஆந் திகதியன்றே அவ்வேலைகள் முடிவடைந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வீதிகள் கையளிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

--------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும்

வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடனுக்கான உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் ஏற்பட்ட சீராக்கல்களது விளைவுகளைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

### 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வழக்கப்படி, செயற்திட்டக் கண்காணிப்புக் கூறில் இணைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பதவியணிக்கென செயற்திட்டத்தால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குத் பணிக்கொடை ஏற்பாட்டுத்தொகை அனுப்பி வைக்கப்படும், எவ்வாறாயினும், பணிக்கொடைக்கான கணிப்பீட்டின் போது செயற்திட்டக் கண்காணிப்புக் கூறின் சேவைக் காலத்திற்குப் பதிலாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிலும் ஏனைய செயற்திட்டங்களில் சேவையாற்றிய காலமும் கணிப்பிடப்படும் அடிப்படையிலேயே கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகவே, வீதி

அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 74,137 தொகை மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

(அ) வழக்கப்படி, வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிமுகஞ் செய்து வைத்த அடிப்படையிலேயே செயற்திட்டத்தில் இணைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. இது 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களுக்கு முரணானதாகும்.

(ஆ) பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினது 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 231,416 தொகை மேந்தலைக் கட்டணமாக வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிப் பயன்பாடு

கிடைக்குமாறு செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்திற்கான நிதியளிப்பு மற்றும் மீளாய்வாண்டின் போதிலான நிதிப் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரம் வருமாறு.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை | | பயன்படுத்தப்பட்ட நிதி | | |
|---|---|---|---|---|---|
| | | | 2013 அம் ஆண்டின் போது | 2013 டிசெம்பர் 31 வரை | |
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 42.5 | 4,880.11 | 959.37 | 30.65 | 3,953.50 |
| இலங்கை அரசாங்கம் | 7.5 | 1,018.19 | 18.23 | 7.45 | 960.60 |
| | 50.0 | 5898.30 | 977.60 | 38.10 | 4,914.10 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

முல்லைத்தீவு - புளியங்குளம் வீதி மற்றும் ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதி ஆகியவற்றின் 52.6 கிலோமீற்றருக்கான புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகள் 2011 ஆகஸ்ட் 15 அன்று ஆரம்பமாகி புனரமைப்பு வேலைகள் முடிந்த பின்னர் 2014 ஜூன் 27 அன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வீதிகள் கையளிக்கப்பட்டிருந்தன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப வடிவமைப்பின் 3 ஆம் தொகுதி 114 ஆம் பிரிவின் பிரகாரம், புனரமைக்கப்பட்ட வீதிகளைப் பராமரிப்பது ஒப்பந்தகாரரின் பொறுப்பாகும். இதற்கென ரூபா 11.23 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழின் பிரகாரம் வீதிப் பராமரிப்பு நோக்கத்திற்காக ஒப்பந்தகாரால் ரூபா 27.26 மில்லியன் கோரப்பட்டிருந்தது. கோரிய முழுத்தொகையும் செயற்திட்டத்தால் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளது 14.9 ஆம் பிரிவின்படி, குறை ஏதும் இருப்பின் அதனை நிவர்த்தி செய்யும் காலம் முடிவடைந்ததன் பின்னரே பொறியியலாளரால் தடுத்த வைத்த பணத்தை மீளச் செலுத்துவதற்கான சான்றிதழ் வழங்கப்படலாம். எவ்வாறாயினும், 2014 ஜுன் 27 ஆகிய பொறுப்புக் கூறக் கூடிய காலத்திற்கு முன்னரே வங்கி உத்தரவாதத்தை ஏற்றுக்கொண்டு மீளாய்வாண்டின்போது தடுத்து வைத்த பணத்தின் ஒரு பகுதியாகிய ரூபா 143.53 மில்லியனைச் செயற்திட்டம் விடுவித்திருந்தது.

(இ) கீழே விபரிக்கப்பட்டவாறு முடிவடைய வேண்டிய பகுதியளவிலான புனரமைப்பு வேலைகள் குறைந்த தரமானவையாக இருக்கையிலேயே வீதிகளின் பெரும் பகுதியை வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்றிருந்தமை தெரிய வந்தது.

| **வீதியின் பெயர்** | **பொறுப்பேற்கும் தருணத்தில் பூர்த்தி செய்ய வேண்டியதாக இருந்த வேலைகள்** |
|---|---|
| முல்லைத்தீவு - புளியங்குளம் | 117 |
| ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி | 39 |
| மொத்தம் | 156 |

கணக்காய்வு அபிப்பிராயத்தின்படி, பொறுப்புக் கூற வேண்டிய காலப்பகுதியின் முடிவில் திடமான மீளாய்வு நடைமுறைக்கேற்ப இனங்காணப்பட்ட குறைபாடுகள் ஒப்பந்தக்காரால் நிறைவேற்றப்பட்டமை உறுதி செய்யப்பட வேண்டும்.

(ஈ) ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த வேலை முடிவில் வழங்கப்படும் சான்றிதழின்படி (எஸ்ஏசீ), பிரமாணக் குறிப்பில் நிதியேற்பாடு அதிகரித்திருந்தமையால் வீதிப் புனரமைப்புக் கிரயத்தில் ரூபா 20.28 மில்லியன் சேமிப்புக்குள்ளாகியிருந்தது. ஒப்பந்தக் கிரயம் அதிகரித்து அதன் வாயிலாக ஒப்பந்தகாரர் வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தை அதிகளவில் பெறுவதற்கு இது வாய்ப்பளித்தது என்பதை இது சுட்டிக்காட்டியது.

(உ) 2012 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்தத்தின் மொத்தக் கிரயத்தை உறுதி செய்யக் கூடியவாறு சகல விடயங்களையும்

கருத்திற்கொண்டு வீதிப் புனரமைப்புக்கான மதிப்பீடு சரிவரத் தயாரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. முல்லைத்தீவு - புளியங்குளம் ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதி புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கான பரப்பெல்லை பின்னர் மாற்றத்திற்குள்ளாகி ரூபா 3,055 மில்லியன் மேலதிகச் செலவை ஏற்படுத்தியிருந்தது. கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.13.4 உறுப்புரிக்கமைய பரப்பெல்லையை மாற்றியமைக்கான விளக்கம் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து இது தொடர்பில் கோரப்படவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

மூல வேலைப்பரப்பில் இடம் பெறாத வட மாகாணத்தின் 4 மாகாண வீதிகளைச் செயற்திட்டம் புனரமைத்து அதன் பொருட்டு ரூபா 934.03 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| **வேலையின் தன்மை** | **செலவாகிய தொகை** |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| புதுக்குடியிருப்பு மீளமர்வுப் பகுதி வீதிகளைப் புனரமைத்தல் | 497.53 |
| ஏ 34 வீதியிலிருந்து அணுகு வீதிகளைப் புனரமைத்தல் | 63.78 |
| திருகோணமலை – புல்மோட்டை வீதித் தளத்தில் அஸ்பலற் பதித்தமையைத் திருத்தஞ் செய்தல் | 71.16 |
| புதுக்குடியிருப்பிலிருந்து பதவிய வரையிலான வீதியைப் புனரமைத்தல். | 301.56 |
| | 934.03 |